# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 13 | Issue : 08 | NOVEMBER 2024 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE






சௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள்
**தினமலர் வெளியீட்டாளர்**
**திரு. எல். ராமசுப்பு**
அவர்களுடன் சிறப்பு சந்திப்பு




சௌராஷ்ட்ர சேம்பர்-ன்
தொழில் வர்த்தக கூட்டத்தில்
சிறப்பு விருந்தினர்
**திரு. எஸ்.எம். மணிகண்டன்**
CBO, Aparajitha Group of Companies
அவர்கள் பேசுகிறார்



METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

## மெட்ரோ ஷூ மார்ட்





16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343

TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps

AQUATEX®


Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317

B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349




KARPAGAM GROUP OF COMPANIES

SINCE 1985

# Karpagam

## Auto Group of Companies

**Dealers in Automobile Spare Parts**

53, 56, 67, Tamil Sangam Road, Madurai - 625 001. Tamilnadu

Ph. 0452-4375875, 2342267, 2340067 | email : stores@karpagamauto.com

# தலைவர் அறிக்கை

அஸ்கிதெ ஞ்கோ மொன்னு பொரெ

## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

தீபாவளிப் பண்டிகை மிகச்சிறந்த முறையில், பாதுகாப்பாக கொண்டாடப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது.

சாதனைகளுடன் சந்திக்கிறேன் என்று சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன். இதோ அவற்றின் தொடக்கம்:–

நமது லாப் ஸமாச்சார், சென்ற மாத இதழ் பாரம்பரியம் மிக்க தினமலர் வெளியீட்டாளர் திரு. எல். ராமசுப்பு அவர்களின் கரங்களால் வெளியிடப்பட்டது, ஒரு பெருமைமிகு நிகழ்வு. இதனை சாதித்த லாப் ஸமாச்சார் இதழ்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. E.R.K. விக்னேஷ் பாபு அவர்களுக்கும், இந்த சந்திப்புக்கு உறுதுணையாக இருந்த Dr. L.D. துளசிராம் அவர்களுக்கும் நன்றிகள் பல. அவர் மேலும் இது போன்ற பல அற்புதங்களைப் படைக்க வாழ்த்துகள்.

நிகழ்ச்சிக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு.S.M. கார்த்தி குமரன் மற்றும் குழுவினர், வாழ்த்துக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. T.K. யாகேஸ்வரன் மற்றும் குழுவினர், உணவுக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. K.B. சிவப்பிரகாஷ் பாபு மற்றும் குழுவினர் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த செயற்குழுவின் முதல் தொழில் வர்த்தக கூட்டம் பிரமிக்க வைக்கின்றது. கடந்த 5ம் தேதி நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் இவர்களின் பங்களிப்பு சரித்திரம் படைத்திருக்கிறது. இவர்களிடம் இன்னமும் அதிகமாக எதிர்பார்க்கலாம் என்கின்ற நம்பிக்கை பிறக்கிறது. பாராட்டுக்கள்.

இன்னும் பல்வேறு குழுக்களாக அங்கத்தினர்கள் தொழில் மேம்பாட்டிற்காகவும், சேம்பர் வளர்ச்சிக்காகவும் செயற்குழு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. அவர்களின் சீரிய முயற்சியில் மேலும் பல்வேறு புதிய திட்டங்கள், செயல்பாடுகள் நிறைவேற்றப்படும் என்பதை உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

சேம்பரில், 2024-26ம் ஆண்டிற்கான சிறப்பு அழைப்பாளர்கள் குழுவில் சேர்ந்து சேம்பர் பணிகளை செய்ய பலர் ஆர்வத்துடன் இணைந்துள்ளதை வரவேற்கிறேன். தம் குடும்பம், தொழில் ஆகியவற்றோடு சேவைகளை செய்ய சேம்பர்-ல் சிறப்பு அழைப்பாளர்களாக இணைந்துள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குழுவில், மகளிரும் இணைய வேண்டும், அவர்களின் பங்களிப்பும் இடம்பெற வேண்டும் என்பதை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

நம் சமூக தொழில் முனைவோர்கள் அனைவரும் சேம்பர் எனும் ஒரு குடையின் கீழ் இணைந்து தொண்டாற்ற வேண்டும் என்பது எங்களின் ஆவல். வாருங்கள்... ஒன்று சேர்வோம்... முன்னேறுவோம்...

SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

**Patron Members**

| | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |



# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. **குமரேஷ்** பாபு

**13.10.2024** – அன்று காலை 11 மணி அளவில் சேம்பர் மேஃபிளவர் அரங்கில் நடைபெற்ற ஸௌராஷ்ட்ர சமூக தொழில் வர்த்தகர்களுடனான சந்திப்பில், மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு. எல். முருகன் அவர்கள் கலந்து கொண்டார். அவர்களிடம் சேம்பர் சார்பாக மதுரை மற்றும் தொழில் வளர்ச்சிக்கு கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

**15.10.2024** – ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் முதல் செயற்குழு கூட்டம் மாலை 6 மணி அளவில் சேம்பர் மேஃபிளவர் அரங்கில் நடைபெற்றது. இதில் சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர். புதிய சிறப்பு அழைப்பாளர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் குழு உருவாக்கம் செய்யப்பட்டது.

**21.10.2024** – 2024 அக்டோபர் மாத லாப் ஸமாச்சார் இதழ் தினமலர் வெளியீட்டாளர் திரு. எல். ராமசுப்பு அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இதில், சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**05.11.2024** – ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் புதிய நிர்வாகத்தின் முதல் மாதாந்திர கூட்டம் மாலை 6 மணி அளவில் சேம்பர் மேஃபிளவர் அரங்கில் நடத்தப்பட்டது. "A"rise - "A"wake தொழில் வளர்ச்சி – விழிப்புணர்வு என்கிற தலைப்பிற்கு சிறப்பு விருந்தினராக திரு. S.M. மணிகண்டன் Chief Business Officer, Aparajitha Group of Companies அவர்கள் கலந்து கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். செயற்குழு உறுப்பினர் திரு. S.S. ராம்சுந்தர் அவர்கள் இந்த ஏற்பாட்டிற்கு உதவி செய்தார். பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி தெரிவித்தார்.

**05.11.2024** – தேசிய அளவிலான கேரம் போட்டியில் 19 வயது ஜூனியர் மகளிர் பிரிவில் முதலாம் இடம் பெற்று சாம்பியன் பட்டம் பெற்ற நம் சமூக மாணவி தேஜஸ்வினி அவர்களை அழைத்து சேம்பர் பாராட்டியது.

**07.11.2024** – சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. டி.கே. அமர்நாத் பாபு அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி விழாவை சிறப்பித்தனர்.



# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. **விக்னேஷ்** பாபு

கடந்த அக்டோபர் மாத லாப் ஸமாச்சார் மாத இதழ் தமிழகத்தின் முன்னோடி தினசரி இதழான தினமலர் வெளியீட்டாளர் திரு. எல். ராமசுப்பு அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இதற்கு உதவிய நமது ஆயுட்கால உறுப்பினரும் மருத்துவருமான Dr. L.D. துளசிராம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவருடனான நீண்ட நேர சந்திப்பு மிகவும் மகிழ்ச்சியளித்தது. இது நம் சேம்பருக்கு கிடைத்த அங்கீகாரமாகவும் கருதுகிறேன். இந்த நவம்பர் இதழை மற்றுமொரு முக்கிய பிரமுகரின் மூலம் வெளியீடு செய்ய திட்டமிட்டுள்ளோம்.

இந்த மாத இதழில் தொழில் குறித்த பல்வேறு பயனுள்ள தகவல்களை வெளியிட்டுள்ளோம். அதனைப் படித்து, அங்கத்தினர்கள் தங்களின் கருத்துக்களை நமது சேம்பருக்கு தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

முக்கியமாக, சேம்பர்-ன் மாதாந்திர நிகழ்ச்சிக்கு வர இயலாதவர்கள், தொலைதூரத்தில் உள்ள அங்கத்தினர்கள் வசதிக்காக இந்த மாத இதழில் (6ம் பக்கத்தில்) இடம்பெற்றுள்ள செய்தியில் காணப்படும் கியூஆர் கோட்-ஐ ஸ்கேன் செய்து நிகழ்ச்சியை காணொலி வாயிலாக காணலாம்.

நமது அங்கத்தினர்கள் தாங்கள் தங்களின் தொழில் அனுபவங்களையும் கட்டுரையாக எழுதி அனுப்பலாம். லாப் ஸமாச்சார் இதழைப் படிக்கும் ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு உங்கள் பொன்னான தகவல்கள் சென்று சேரும். அவர்களுக்கும் தொழிலில் உத்வேகத்தை ஏற்படுத்த வாய்ப்பாக அமையும்.

உங்கள் கருத்து மற்றும் கட்டுரைகளை 9344197952 என்ற எண்ணிற்கு அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன்.

---

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544



*Best Compliments from*

# BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.

# ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் நவம்பர் மாத தொழில் வர்த்தக கூட்டம்




ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் புதிய நிர்வாகத்தின் முதல் மாதாந்திர கூட்டம் கடந்த 05.11.2024 அன்று மாலை 6 மணி அளவில் சேம்பர் மேஃபிளவர் அரங்கில் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்குழு தலைவராக செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் செயற்குழு கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்டதன்படி முதல் நிகழ்ச்சியாக அவரது ஏற்பாட்டில் இந்த கூட்டம் நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர் திரு. S.S. ராம்சுந்தர் இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டிற்கு உதவி செய்தார்.

சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். “A”rise - “A”wake தொழில் வளர்ச்சி – விழிப்புணர்வு என்கிற தலைப்பிற்கு சிறப்பு விருந்தினராக திரு. S.M. மணிகண்டன் Chief Business Officer, Aparajitha Group of Companies அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

திரு. S.M. மணிகண்டன் அவர்கள் பேசுகையில், முதலில், தம் அனுபவங்களையும், தன் நிறுவனத்தின் வளர்ச்சி பற்றியும் விவரித்து பின்னர் கூட்டத்தின் நோக்கப்படியான கருத்திற்கு பேசத்துவங்கினார். அதில் நமது தொழிலை பல்வேறு படிநிலைகளில் எவ்வாறு சீர்தூக்கிச் செல்வது பற்றி ஒவ்வொன்றாக விவரித்தார்.

அதன்படி முதலாவதாக கூறியது, பணமே கடவுள் என்றார். ஒரு தொழில் முனைவோர் தான் செய்யும் தொழிலில் முதலில் கவனிக்க வேண்டியது Outstanding Statement தான்.

நமது பணம் நம் கையில், வங்கியில் இருக்க வேண்டும், மாறாக பொருளாகவோ, வேறுவகையிலோ இருக்கக் கூடாது. நம் பணம் நமது கையில் வந்தால் தான் தொழிலை நல்ல நிலைக்கு கொண்டு செல்ல முடியும் என்றார்.

அடுத்ததாக, Data is Guru என்றார். தகவல் தான் நம் தொழிலை வழிநடத்தும் ஆசான். அதற்கு எம்.ஐ.எஸ். முறை அவசியம். ஒவ்வொரு தொழில் முனைவோரும் தினமும் அதனை கவனிப்பது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்றார்.

மூன்றாவதாக Compliance is your Insurance என்றார். அதாவது, நம் தொழிலாளர்களுக்கும், அரசுக்கும் செலுத்தக்கூடிய இ.எஸ்.ஐ. பி.எஃப் மற்றும் வரி போன்றவைகளை காலதாமதமின்றி செலுத்திவிட வேண்டும் என்று அதற்கு பொருத்தமான சில உதாரணங்களுடன் அருமையாக விளக்கினார்.

நான்காவதாக Team is your Source of Success என்றார். தான் ஒரு தொழில்முனைவோர் என்ற மனோபாவத்தில் இயங்காமல், நம் தொழிலுக்காக ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அனைவரும் ஒரு குழுவாக இணைந்து சமமாக பாவித்து செயல்படுதல் வெற்றியை அளிக்கும் என்றார்.

இந்த QR Code-ஐ ஸ்கேன் செய்து நிகழ்ச்சியின் வீடியோவை காணலாம்

Corporate, Expansion, Time Management, Leadership Quality, Crisis, Recognition Team, Engage Professionals, Value of Money, Appreciate, Emotional, Favoritism என வரிசையாக 21 வகையான விஷயங்களுக்கு மிக அழகாகவும், தெளிவாகவும் விளக்கமளித்து தனது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்களின் கேள்விகளுக்கும் மிக அருமையாக பதிலளித்தார். அனைவருக்கும் இந்த நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

இதனையடுத்து, சிறப்பு விருந்தனருக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இந்த கூட்டத்திற்கு அறுசுவை உணவு ஏற்பாடு செய்த செயற்குழு உறுப்பினர் திரு. M.M. தனசேகரன், சிறப்பு அழைப்பாளர்கள் திரு. E.S. ரமேஷ் பாபு, திரு. K.S. சிவக்குமார், திரு. K.D. தினகரன் பாபு, திரு. V.R. சேகர் மற்றும் ஆயுட்கால உறுப்பினர் திரு. M.K. கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.



# ADISHTU
TRUSTABLE SNACKS PARTNER



## STARTUP INDIA
# ENERGY BAR




- NO ADDED SUGAR
- NO ADDED PRESERVATIVES
- NO ADDED CHEMICALS
- NO ARTIFICIAL SWEETNESS
- NO ARTIFICIAL FLAVORS
- NO DAIRY, SOY, GLUTEN

fssai
12423012002062

Ministry of Micro, Small and Medium Enterprises
Government of India
MSME
MICRO, SMALL & MEDIUM ENTERPRISES
सूक्ष्म, लघु एवं मध्यम उद्यम

MADE IN INDIA

adishtu
WWW.ADISHTU.COM

# ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள்
# தினமலர் வெளியீட்டாளருடன்
## சிறப்பு சந்திப்பு



■ மதுரையில் லாப் சமாச்சர் மாத இதழை தினமலர் வெளியீட்டாளர் டாக்டர் எல்.ராமசுப்பு (இடமிருந்து 3 வது) வெளியிட டாக்டர் துளசிராம் பெற்றுக்கொண்டார். இடமிருந்து சௌராஷ்டிரா தொழில் வர்த்தக சங்க செயலாளர் குமரேஷ் பாபு, தலைவர் தினேஷ், மாத இதழ் உதவி ஆசிரியர் விக்னேஷ் பாபு, துணைத்தலைவர் குபேந்திரன்.

2024-2026ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம் துவங்கிய பிறகு செயற்குழு உறுப்பினர் திரு. E.R.K. விக்னேஷ் பாபு அவர்களின் ஒருங்கிணைப்பில் வெளியாகும் முதல் லாப் ஸமாச்சார் இதழ் (அக்டோபர் 2024) தமிழகத்தின் முன்னோடி நாளிதழான தினமலர் வெளியீட்டாளர் **திரு. எல். ராமசுப்பு** அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது.

இந்த சந்திப்பில், சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ், துணைத்தலைவர் திரு. K.K. குபேந்திரன், பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு, லாப் ஸமாச்சார் இதழ் சேர்மன் திரு. E.R.K. விக்னேஷ் பாபு மற்றும் சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும் இந்த சந்திப்பிற்கு முயற்சி மேற்கொண்ட மருத்துவர். L.D. துளசிராம் ஆகியோர் இடம்பெற்றனர்.

அப்போது, சேம்பர் உருவான விதம் குறித்து கேட்டறிந்தார், சமூகம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அப்போது, சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தினமலர் நாளிதழ் குழுவினருக்கு தனது நீண்ட நாள் கோரிக்கையாக தெரிவித்து வருவதை திரு. எல். ராமசுப்பு அவர்களிடமும் தெரிவித்தார். அதாவது, நாளிதழ்களில் நம் சமூகத்தைக் குறிப்பிடும் வகையில் “சௌராஷ்ட்ரா” என்பதை “சவுராஷ்ட்ரா” என்று வெளியிடுகிறார்கள். இது எங்கள் சமூக மக்கள் வாசிக்கும் போது சங்கடத்தைத் தருகிறது. அதனைத் திருத்தி இனி வருங்காலங்களில் “சௌராஷ்ட்ரா” என்று வெளியிடுமாறு தமது வாய்மொழியான கோரிக்கையை வைத்தார்.

இதனை ஏற்றுக்கொண்டு மறுநாள் நாளிதழில், இந்த சந்திப்பு நிகழ்வை புகைப்படத்துடன் வெளியிடும்போது, “சவுராஷ்ட்ரா” என்பதற்கு பதிலாக “சௌராஷ்ட்ரா” என்று வெளியாகியிருந்தது கண்டு சேம்பர் மகிழ்ச்சி அடைந்தது.

இனி வரும் காலங்களில் தினமலர் நாளிதழில் “சவுராஷ்ட்ரா” என்பதற்கு பதிலாக “சௌராஷ்ட்ரா” என்றே வெளியிடுவார்கள் என்று நம்புகிறோம்.

---

## From 10 Oct. 2024 this Chart is apply for GST on RENT

***Notification dtd. 8th Oct. 2024***

NOTIFICATION

New Delhi, the 8th October, 2024

**No. 09/2024- Central Tax (Rate)**

**G.S.R. 623(E).—** In exercise of the powers conferred by sub-section (3) of section 9 of the Central Goods and Services Tax Act, 2017 (12 of 2017), the Central Government, on the recommendations of the Council, hereby makes the following further amendments in the notification of the Government of India, in the Ministry of Finance (Department of Revenue), number 13/2017-Central Tax (Rate), dated the 28th June, 2017, published in the Gazette of India, Extraordinary, Part II, Section 3, Sub-section (i), *vide* number G.S.R. 692(E), dated the 28th June, 2017, namely:-

1. In the said notification, in the Table, after serial number 5AA and the entries relating thereto, the following serial number and entries relating thereto in columns (2), (3) and (4) shall be inserted, namely: -

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| “5AB | Service by way of renting of any property other than residential dwelling. | Any unregistered person | Any registered person.” |

2. This notification shall come into force with effect from the 10th day of October, 2024.

[F. No. 190354/149/2024-TO(TRU-II) – Part-I CBEC]

DILMIL SINGH SOACH, Under Secy.

**Note:** - The principal notification number 13/2017 -Central Tax (Rate), dated the 28th June, 2017 was published in the Gazette of India, Extraordinary, vide number G.S.R. 692 (E), dated the 28th June, 2017 and was last amended vide notification number 14/2023 -Central Tax (Rate), dated the 19th October, 2023 published in the Gazette of India vide number G.S.R. 765(E), dated the 19th October, 2023.

Important Notes
1. URD to URD supply are out of the scope of GST.
2. Exemption is still avaiable if residential property is used for residential purpose
3. Earlier RCM was applied on residential property, now the scope is extended to commercial property as well

| | | | | |
|---|---|---|---|---|
| Commercial Property | Landlord Registered | Tenant Registered | Landlord need to charge GST on FCM | |
| | | Tenant Unregistered | Landlord need to charge GST on FCM | |
| | Landlord not Registered | Tenant Registered | Tenant need to pay under RCM (54 Council Meeting) | |
| | | Tenant Unregistered | No GST | |
| Residential Property | Landlord Registered | Residential Purpose | Exempt | |
| | | Commercial Purpose | Landlord need to charge GST on FCM | |
| | Landlord not Registered | Residential Purpose | Exempt | |
| | | Commercial Purpose | Tenant Registered | Tenant need to pay under RCM |
| | | | Tenant Unregistered | No GST |



## 2024-2026 Team fondly remembers great service rendered by our Past Presidents to the community and Sou. Chamber

# Past Presidents



**C.K. Sekar**
President (2009-11)
M/s. Graphipackss Pvt. Ltd.



**E.R. Kumaresan**
President(2011-2013)
M/s. EAVR Groups



**K.K.G. Prabhakaran**
President(2013-2015)
M/s. Kuttuva Silicate Pvt. Ltd.



**S.K.R. Ramesh**
President(2015-2017)
M/s. Ramesh Cottage Industries



**M.K. Kaladhar Babu**
President(2017-2019)
M/s. Pandian Print & Packs Pvt. Ltd.



**Kumaran B Jaghuva**
President(2019-2022)
M/s. Quality Knit Wears Pvt. Ltd.



## சாம்பியன் பட்டம் பெற்ற மாணவிக்கு பாராட்டு

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கடந்த 05.11.2024 அன்று நடைபெற்ற தொழில் வர்த்தக கூட்டத்தின்போது, உத்தரபிரதேசம் மாநிலம் கான்பூரில் நடைபெற்ற மத்திய அரசின் சி.ஐ.எஸ்.சி.இ. பள்ளிகளுக்கு இடையிலான தேசிய அளவிலான கேரம் போட்டியில் 19 வயது ஜுனியர் மகளிர் பிரிவில் முதலாம் இடம் பெற்று சாம்பியன் பட்டம் பெற்ற மதுரை விகாசா பள்ளியில் பயிலும் நம் சமூக மாணவி தேஜஸ்வினி அவர்களை அழைத்து பாராட்டியது. அவரை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவித்தார். நம் சமூக இளைஞர்கள் இதுபோன்ற சாதனைகளை படைத்து பெற்றோருக்கும் சமூகத்திற்கும் பெருமை தேடித்தர வேண்டும் என்றார். இந்த நிகழ்வில் சேம்பர் நிர்வாகிகள் மற்றும் மாணவியின் பெற்றோர் உடனிருந்தனர்.

---

## திருத்தம்

சென்ற அக்டோபர் 2024 மாத இதழின் 6ம் பக்கத்தில் வெளியான பொதுக் கூட்டம் நடைபெற்றது பற்றிய தகவலில் 30.10.2024 என்று குறிப்பிடப்பட்டிருந்த தேதியை 29.09.2024 என்று திருத்தி வாசிக்கவும்.



ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் 2024-2026ம் ஆண்டின் புதிய நிர்வாகத்தால் நடத்தப்படும் முதல் செயற்குழு கூட்டம் கடந்த 15.10.2024 அன்று சேம்பர் மேஃபிளவர் அரங்கில் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் சேம்பர் செயற்குழு உறுப்பினர்களுக்கு பல்வேறு பொறுப்புகள் அளிக்கப்பட்டன.





விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்
விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162
கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1993 31 Years 01-07-1993 2023 SVLS
வெள்ளி விழா கண்ட நிறுவனம்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

தினசரி & கட்டிங் மாத காலண்டர் | 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர் | தமிழ் டைரி ஆங்கில டைரி | 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை | பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY | விபூதி கவர் 7 DAYS DELIVERY | சாமி படம் வுட்லேமினேசன் | ஸ்கூல் லேபிள்






நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!
Cell : 98421-18873, 98428-18873
R.R. பாலகுமார்
R.R. குபேந்திரன்
R.R. பிரேம்குமார்
e.mail : svlsmadurai@gmail.com

## நூல் விலை
# கிலோவுக்கு ரூ. 10 குறைவு

பின்னலாடை தயாரிப்புக்கு மிக முக்கிய மூலப்பொருளாக நூல் இருந்து வருகிறது. நூற்பாலைகள் நவம்பர் மாதத்திற்கான இந்த நூல் விலையை (செப் 4)ல் அறிவித்துள்ளது. அதன்படி அனைத்து ரக நூல்களுக்கும் கிலோவுக்கு ரூ. 10 குறைத்து அறிவித்துள்ளது. கடந்த 6 மாத காலமாக விலையில் எந்தவித ஏற்றமும் இறக்கமும் இல்லாத சூழலில் தற்பொழுது ரூ. 10 விலை குறைந்து இருப்பது தொழில் துறையினருக்கு சற்று நிம்மதியை தந்துள்ளது.

இதன்படி, (கிலோவுக்கு) 10ம் நம்பர் கோம்டு நூல் விலை ரூ. 266க்கும், 16ம் நம்பர் ரூ. 270-க்கும், 20வது நம்பர் ரூ. 270-க்கும், 25வது நம்பர் ரூ. 279-க்கும், 30வது நம்பர் ரூ. 291-க்கும், 34வது நம்பர் ரூ. 298-க்கும், 40வது நம்பர் ரு. 347-க்கும், 20வது நம்பர் செமி கோம்டு நூல் ரூ. 277-க்கும், 25வது நம்பர் ரூ. 286-க்கும், 30வது நம்பர் ரூ. 280-க்கும், 34வது நம்பர் ரூ. 287-க்கும், 40வது நம்பர் ரூ. 308-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பாலிஸ்டர், விஸ்கோஸ் போன்ற செயற்கை இழை
# துணி ரகங்கள் ஆதிக்கம்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மொத்த ஜவுளிப் பொருட்கள் விற்பனையில் பாலிஸ்டர் உள்ளிட்ட செயற்கை இழை கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்கள் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. எதிர்காலத்தில் பருத்தி பயன்பாடு முற்றிலும் குறைவதற்கான அறிகுறி என தொழில் துறையினர் கருதுகின்றனர்.

பருத்தியை மூலப் பொருட்களாகக் கொண்டு செயல்படும் இந்திய ஜவுளிச் சங்கிலித் தொடரில் தமிழகம் முக்கியப் பங்கு வகிக்கிறது. பருத்தி மூலம் தயாரிக்கப்படும் ஜவுளிப் பொருட்களைவிட, செயற்கை இழை கலந்து தயாரிக்கப்படும் ஜவுளிப் பொருட்களுக்கான உற்பத்திச் செலவு குறைகிறது. மேலும், அவை துணியின் ஆயுளை அதிகரிக்கவும், சுருக்கத்தை குறைத்து மேம்படுத்தவும் உதவிகின்றன. இதனால் சமீபகாலமாக ஜவுளிப் பொருட்கள் உற்பத்தியில் பருத்திக்கு மாற்றாக பாலிஸ்டர், விஸ்கோஸ் போன்ற செயற்கை இழை பொருட்கள் பயன்பாடு அதிகரித்துள்ளது.

## முத்ரா திட்டம்
# கடன் வரம்பு உயர்வு

2024 ஜூலை 23 அன்று தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட் 2024-25ல் முத்ரா கடன் வரம்பை ரூ. 20 லட்சமாக உயர்த்துவதாக நிதியமைச்சர் அறிவித்தார். இந்த புதிய வரம்பு 2024 அக்டோபர் 24 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த அறிவிப்பு தருண் பிளஸ் என்ற புதிய கடன் வகையையும் அறிமுகப்படுத்துகிறது. இது தருண் வகையின் கீழ் முன்னர் கடன்களைப் பெற்று வெற்றிகரமாகத் திருப்பிச் செலுத்தியவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அவர்களுக்கு ரூ. 10 லட்சம் முதல் ரூ. 20 லட்சம் வரை கடன் பெற அனுமதிக்கிறது.

★ **சிஷு** : ரூ. 50 ஆயிரம் வரையிலான கடன்களை உள்ளடக்கியது.
★ **கிஷோர்** : ரூ. 50 ஆயிரம் மேல் மற்றும் ரூ. 5 லட்சம் வரை கடன்களை உள்ளடக்கியது.
★ **தருண்** : ரூ. 5 லட்சம் முதல் ரூ. 10 லட்சம் வரையிலான கடன்களை உள்ளடக்கியது.
★ **தருண் பிளஸ்** : ரூ. 10 லட்சம் முதல் ரூ. 20 லட்சம் வரை கடன் உள்ளடக்கியது.

## வணிக வாகன ஓட்டிகளுக்கு
# நிவாரணம்

இலகுரக மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள் போக்குவரத்து வாகனங்களை ஓட்டி விபத்து ஏற்பட்டால், காப்பீட்டு வழங்கும் உரிமைகோரலில் சட்டசிக்கல்கள் இருந்து வருகிறது. இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதிகள் ராய், பி.எஸ். நரசிம்ஹா, பங்கஜ் மித்தல், மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய 5 நீதிபதிக்ள் கொண்ட அமர்வு விசாரித்து வந்தது.

இந்நிலையில், இந்த மாதம் (நவம்பர் 2024), உச்சநீதிமன்றத்தில் மீண்டும் இவ்வழகக்கு விசாரணைக்கு வந்த போது, வணிக வாகன ஓட்டிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், இலகுரக மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர்கள் 7500 கிலோ எடைகொண்ட போக்குவரத்து வாகனங்களை ஓட்டலாம் என்று நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். இந்த உத்தரவால் இலகுரக மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமை வைத்திருப்பவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

Sowndarya Traders
T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733
Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS
57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# மக்களிடம் அதிகரிக்கும் டிஜிட்டல் தங்க முதலீடு

**டிஜிட்டல் கோல்ட்:** நேரடியாக தங்கம் வாங்குவதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்பதை விரிவாக பார்ப்போம். இந்தியாவில் தங்கத்தின் மீதான முதலீடு மிகவும் பாதுகாப்பானதாக மக்களிடையே கருதப்படுகிறது. அந்த வகையில் அதிக வருமானம் ஈட்டும் நபர்கள் தங்கத்தை நேரடியாக வாங்கவே ஆர்வம் காட்டி வருகின்றனர் என தனியார் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களிடையே டிஜிட்டல் கோல்ட் வாங்கும் போக்கு அதிகரித்து வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள எண்ணற்ற வசதிகள் இதற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

டிஜிட்டல் முறையில் வாங்கும் தங்கள் பாதுகாப்பாக இருக்கும், வேண்டிய நேரத்தில் எளிதாக விற்பனை செய்து பணம் பெறுவது இதற்கு காரணம் என ஆய்வில் பங்கேற்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

**டிஜிட்டல் தங்கம் என்றால் என்ன?** வழக்கமாக நகைக்கடைக்கு சென்று நேரடியாக தங்கம் வாங்கும் போது செய்கூலி, சேதாரம் போன்றவையும் சேர்க்கப்படும். ஆனால், டிஜிட்டல் முறையில் விர்ச்சுவலாக தங்கம் வாங்கும் போது இந்த சிக்கல் இல்லை. ஜி.எஸ்.டி வசூலிக்கப்படுகிறது. இதை எளிதில் வாங்கி, ஆன்லைனில் வைத்துக்கொள்ளலாம். அதை பத்திரமாக லாக்கரில் வைத்து பாதுகாக்க வேண்டிய அவசியமும் இல்லை. கிராம் மற்றும் பவுன் என இல்லாமல் சிறிய அளவில் தங்கம் வாங்கும் சாய்ஸ் டிஜிட்டலில் உள்ளது. நேரடியாக தங்கம் வாங்குவதற்கு இணையான மதிப்பினை இது கொண்டுள்ளது. தங்கத்தின் விலையை நிகழ் நேரத்தில் அறிந்துகொண்டு வாங்கவும், விற்கவும் செய்யலாம்.

**வாங்குவது எப்படி?** டிஜிட்டல் தங்கத்தை ஆன்லைனில் உள்ள நம்பகமான பல தளங்களை அணுகி வாங்கலாம். இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள் மூலம் டிஜிட்டல் முறையில் தங்கம் வாங்கலாம். கூகுள் பே, போன் பே, யுபிஐ போன்ற செயலிகள் மூலம் வாங்கி விற்கலாம். தவிர, தேசிய பங்குச் சந்தை மற்றும் மும்பை பங்குச் சந்தையில் கோல்ட் இடிஎஃப்-ல் முதலீடும் செய்யலாம். வங்கிகளிலும் பெறலாம். தங்க கடன் பத்திர திட்டம் மூலமாகவும் இந்தியாவில் டிஜிட்டல் முறையில் தங்க முதலீடு செய்யலாம்.

# நீட், ஜேஇஇ மத்திய அரசு வழங்கும் இலவச ஆன்லைன் பயிற்சி

நம் நாட்டில் எம்.பி.பி.எஸ் உட்பட மருத்துவப் படிப்புகளில் சேர நீட் நுழைவுத்தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும். இதேபோல், மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் பொறியியல், சட்டம் போன்ற தொழிற்கல்வி படிப்புகளில் சேரவும் ஜேஇஇ, கிளாட் போன்ற தேர்வுகள் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி அடைவதற்காக மாணவர்கள் தொடர் பயிற்சி பெற வேண்டிய நிலையுள்ளது.

நீட், ஜேஇஇ நுழைவுத் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வழங்கும் பணிகளை மத்திய கல்வி அமைச்சகம் முன்னெடுத்துள்ளது. தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) சார்பில் இந்த பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்கென பிரத்யேக சதீ (sathee) எனும் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாணவர்கள் இலவச பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுதவிர க்யூட், கிளாட் போன்ற நுழைவுத் தேர்வுகள், எஸ்எஸ்சி, வங்கி போன்ற பணித் தேர்வுகளுக்கும் பயிற்சி தரப்படுகிறது. மாணவர்கள் https://sathee.prutor.ai/ என்ற இணையதளத்துக்கு சென்று எந்த தேர்வுகளுக்கு தயாராக வேண்டுமோ அதற்கு முன்பதிவு செய்து இலவச பயிற்சி வகுப்புகளில் பங்கேற்கலாம். மேலும், அந்த இணையதளத்தின் கீழ் பகுதியில் நுழைவுத் தேர்வுகளுக்கு இன்னும் எத்தனை நாட்கள், எவ்வளவு நேரங்கள் உள்ளன என்ற விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கல்வியாளர்கள், ஆசிரியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

## வித்யாலஷ்மி திட்டம்

இந்த திட்டத்தால், 860 தகுதிய்ந்த உயர்கல்வி (QHEIs) நிறுவனங்களில் சேரும் எந்தவொரு மாணவரும் வங்கிகள், நிதி நிறுவனங்களிடமிருந்து பிணையம் இல்லாத, உத்தரவாதம் இல்லாத கடனைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 8 லட்சம் வரை உள்ள மாணவர்களுக்கு ரூ. 10 லட்சம் வரையிலான கல்விக் கடனுக்கு 3% வட்டி மானியமும், ரூ. 7.5 லட்சம் வரையிலான கல்விக் கடனுக்கு 75% கடன் உத்தரவாதமும் வழங்கப்படும். எளிய, வெளிப்படையான, மாணவர்களுக்கு ஏற்ற எளிய நடைமுறைகளின் மூலம் முற்றிலும் டிஜிட்டல் முறையில் செயல்படுத்தப்படும் திட்டம் இதுவாகும்.




# விஸ்வகர்மா திட்டம்

இந்த திட்டம், பயோ மெட்ரிக் அடிப்படையிலான பிரதமரின் விஸ்வகர்மா தளத்தைப் பயன்படுத்தி பொது சேவை மையங்கள் மூலம் விஸ்வகர்மாக்கள் இலவசமாக பதிவு செய்யப்படுகின்றன.

கைவினைஞர்களுக்கு பிரதமரின் விஸ்வகர்மான சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை மூலம் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

அவர்கள் 5% சலுகை வட்டி விகிதத்துடன் ரூ. 1 லட்சம் (முதல் தவணை) மற்றும் ரூ. 2 லட்சம் (இரண்டாவது தவணை) வரை பிணையம் இல்லாத கடன் உதவியைப் பெறுகிறார்கள்.

மத்திய அரசால் 8% வட்டி மானியம் வழங்கப்பட்டு வங்கிகளுக்கு முன்பணமாக வழங்கப்படும். அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சி, கருவித்தொகுப்பு ஊக்கத்தொகை ரூ. 15000 மற்றும் டிஜிட்டல் பிரிவர்த்தனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவு ஆகியவற்றை உள்ளடக்கிய திறன் மேம்பாட்டு முறைகளை இந்த திட்டம் மேலும் வழங்குகிறது.


APPOLO SALES & SERVICE

அப்போலோ மோட்டார் & பம்ப்ஸ்

Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE

YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT

32B, குருவிக்காரன் சாலை,
கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.

98428 14725

பழைய மோட்டார் EXCHANGE செய்யப்படும்



சப்மெர்சிபள் பம்ப் (காப்பர் ரோட்டர்) ரூ 7500 முதல்

கம்பரசர் மோட்டார் ரூ12,500 முதல்



மோனோபிளாக் மோட்டார் ரூ 6500 முதல்



ஓபன்வெல் மோட்டார் ரூ 5500 முதல்





## Available for Lease Rent

**Owner Name:**
M.K. Kaladhar Babu
Managing Director
Pandian Printpacks and Textile Mills Pvt. Ltd.,
Kappalur, Madurai - 625008

**GST No.:** 33AABCP0789M1Z4

**SIDCO Address:**
Shed No. 22A, SIDCO Industrial Estate, Kappalur, Thirumangalam Taluk, Palakkapudupatti Village, Madurai - 625008.

**Building Area:**
61.5' * 42.5' (2615 Sq.ft) with Galvanised (JSW) sheet roofed buildings

**Shed No.:** 5

**EB Power:** 104.8HP/105KW

Available for immidiate occupation.

**Contact Nos.**
99944 35350
99944 98090


## திருக்குறள்

**ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்**
**ஏனை இரண்டும் ஒருங்கு.**

**பொருள்:** நல்ல வழிகளில் சம்பாதிக்கப்பட்ட செல்வம் நிரம்ப உள்ளவர்களுக்கு அறம், பொருள், இன்பம் என்ற மூன்று லட்சியங்களில் மற்ற இரண்டு லட்சியங்களாகிய அறமும் இன்பமும் சேர்ந்தாற் போல் எளிதில் கைகூடும்.

அதிகாரம் 76 — பொருள் செயல்வகை (பொருள் சம்பாதிக்கும் முறை) — அங்கவியல்


நூருண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145, East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO, 43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL




ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com


MAHO JASE
IT Service
Comprehensive IT Partner
O.R. SURESH BABU
Co-Founder & Marketing Head
WEBSITE & SOFTWARE DEVELOPMENT
Websites | Mobile APP | E-Commerce
Starts From ₹5000/-
O.S. HIRAN RAM BABU
Co-Founder & CEO
DIGITAL MARKETING
Call Us
• Digital Marketing
• Social Media Management
• Poster Design
• Ads on Social Media
• WhatsApp Catalogue setup
OTHER SERVICES: IT Training, Guaranteed Career Support, College Projects, Student Internship, Presentation (PPT), MSME & UDAYAM Registration, Infrastructure Management Services
MAHO JASE IT
471, West 1st Cross St., KK Nagar, Madurai- 20.
+91-6379618513 | 0452-4991171
CHENNAI | MADURAI | TRICHY
info@mjit.in
www.mjit.in

# ஜி.எஸ்.டி
## சில தகவல்கள்

## Circular No. 211/2024 dt. 26.06.2024

Claim of ITC on RCM liability RCM முறை ஒரு குறிப்பிட்ட சரக்கு மற்றும் சேவை இனங்களில் அதை வாங்கும் வணிகரே வரிகட்ட வேண்டுமென்பதாகும். அவ்வாறு கட்டிய வரியை Claim செய்து கொள்ளலாம். RCM கட்டிய தொகைக்கு Self Invoice create செய்துகொள்ள வேண்டும்.

சில வணிகர்கள் RCM உள்ள பொருட்கள் மற்றும் சேவைக்கு Reverse Charge வரிகட்டாமலே இருந்து வந்தனர். தற்பொழுது அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு அதற்கான RCM வரி, வட்டி வசூலிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பழைய வருடங்களுக்கான RCM வரியை தற்பொழுது கட்டினால் அதனை Claim எடுத்துக்கொள்ளலாம் என்ற விவரங்களை உள்ளடக்கியது இந்த சுற்றறிக்கை.

இதில் Self Invoice எப்பொழுது create செய்யப்பட்டுள்ளதோ அதிலுள்ள வரியை அடுத்த November-க்குள் Claim செய்துவிட வேண்டும். தற்பொழுது பழைய வருடங்களுக்கான RCM வரியை தற்பொழுது செலுத்தி Self Invoice create செய்யப்பட்டால் அந்த RCM வரியை இந்த வருடத்தில் Claim செய்துகொள்ளலாம்.

ஆனால் வட்டி செலுத்த நேரிடும். உதாரணத்திற்கு பருத்தி வணிகர்கள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட Raw Cotton Purchase-க்கு ஒருசில வணிகர்கள் RCM செலுத்தாமல் இருந்து வந்தனர். தற்பொழுது அதிகாரிகளின் ஆய்வுப்படி பழைய வருடங்களுக்கான RCM வரி தற்பொழுது செலுத்த நேரிடுகிறது. அதனை Self Invoice create செய்து பணம் செலுத்தினால் அதனை இந்த வருடத்தில் ITC ஆக Claim செய்துகொள்ளலாம். ஆனால் வட்டி கட்ட நேரிடும்.

## Notification No. 14/2024 dt. 10.07.2024

2023-24ம் ஆண்டிற்கான வணிகரின் ஆண்டு விற்பனை தொகை ரூ. 2 கோடிக்கு கீழ் இருப்பின் Annual Return GSTR-9 தாக்கல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## வட்டி

ஒரு வணிகர் படிவம் 3B-ல் வரி செலுத்துவதை காலதாமதமாக 3B தாக்கல் செய்யும் பட்சத்தில் தாக்கல் செய்யும் காலத்தில் ITC இருப்பு இருந்தால் அதற்கு வட்டி வசூலிக்கப்படாது (Late Fee மட்டும் செலுத்த நேரிடும்) எனக் கூட்டத் தொடரில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## Circular No. 212/2024 dt. 26.06.2024

வணிகர்கள் Discount-ஐ Credit Note மூலம் பெரும்பொழுது இரண்டு வகையான இனங்கள் உள்ளன.

அ. Agreement and Financial Credit Note இருந்தால் Reverse செய்ய தேவையில்லை.

ஆ. Agreement இருந்து Credit Note-ல் Tax இனம் இருந்தால் (2A-வில் Reflect ஆகும்) அதனை Reverse செய்ய வேண்டும்.

மேற்கூறிய இரண்டாவது இனத்தில் பொருட்களை வாங்கியவர் உண்மையிலேயே Reverse செய்து விட்டாரா என Supplier-ஆலும், அதிகாரிகளாலும் அறியமுடியவில்லை. அதனை தெரிந்துகொள்ளும் பொருட்டு தற்பொழுது GST Portal-ல் facility இல்லாத காரணத்தினால் பொருட்கள் வாங்கும் வணிகரே Reverse செய்த காரணத்தைக் காட்டி Self Declaration அல்லது Chartered Account மூலமாக Certificate-ஐ பொருட்களை விற்ற வணிகருக்கு கொடுக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

## Section 16(4) ITC Time Limit

ஒரு வணிகர் தாங்கள் கொள்முதல் செய்யும் பொருட்கள் அல்லது சேவை இனங்களில் உள்ள ITC-யை அடுத்த வருட செப்டம்பர்-க்குள் (தற்பொழுத நவம்பர்) எடுக்க வேண்டுமென GST சட்டப்பிரிவு16(4)ல் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நிறைய வணிகர்கள் அந்த ITC தொகையை காலம் தாழ்த்தி எடுத்திருந்தனர். அதனால் வரி, வட்டி மற்றும் Penalty அவர்கள் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது மற்றும் உச்சநீதிமன்றத்திலும் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. பல்வேறு வணிக அமைப்புகளும் GST சட்டம் புதிது என்பதால் இவ்வாறான காலதாமதமாக எடுக்கப்பட்ட ITC-யை அனுமதிக்கப்பட்ட வேண்டும் என கோரிக்கைகள் வைத்த வண்ணம் இருந்தன.

அதன் அடிப்படையில் 2017-18, 2018-19, 2019-20 மற்றும் 2020-21 வருடங்களில் உள்ள விடுபட்டு காலதாமதமாக எடுக்கப்பட்ட ITC தொகை 30.11.2021-க்குள் Claim செய்யப்பட்டிருந்தால் அது போதுமானது என்று மிக முக்கியமான சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.




*With best compliments from*

## Kfam Group of Companies

## Pandian Surfactants Private Limited

Manufacturers Representative for



**K.K.Dinakaran**
Chairman & Director

Godrej – Chemical Division

IFF – Perfumes & Fragranaces

INDORAMA – Speciality Chemicals

## Kfam Micro Products Private Limited

Manufacturers of Speciality Chemicals & Consumer Products



## Kfam Micro Polymers

Manufacturers of Blow Moulding & Injection Moulding Products



Regd. Office : **Pandian Surfactants Private Limited**

**Shed No.57/62, (NP) Sector 1, 3rd Street, Ambattur Industrial Estate,**
**SIDCO Industrial Estate, Pattaravakkam, CHENNAI-600 098.**
**Email : dinakaran@pfpl.in Kishan@pfpl.in www.pandiansurfactants.com**

Branches | Chennai | Madurai | Hyderabad | Bangalore

# கப்பலோட்டியவர்



தியாகச்செம்மல்
வ.உ. சிதம்பரம் பிள்ளை

## செக்கிழுத்தது - காலத்தின் கோலம்

தியாகச்செம்மல் வ.உ.சி., அவர்கள் மறைந்த தினம், நவம்பர் 18. அன்னாரின் தேசத்தொண்டினை நினைவுகூர்வது, பாரதநாட்டின் ஒவ்வொரு குடிமகனின் கடமை, செஞ்சோற்றுக்கடன்.

வழக்கறிஞர் (பல வழக்குரைஞர்கள் நடுவே, இவர் ஒருவரே வழக்கறிஞர்). தொழிலில் கோலோச்சிக்கொண்டிருந்தவர், அந்த சேவையைத் தொடர்ந்திருந்தால், கோடிகளின் கோமானாக இருந்திருப்பார். ஆனால் நாட்டுப்பற்று இவரை பற்றிக்கொண்ட காரணத்தால், தொழிலையும் வருமானத்தையும் சேர்த்து தியாகம் செய்ய வேண்டி வந்தது.

தூத்துக்குடியின் தொழிற்சாலையில், நியாயமான கோரிக்கைகளை முன்நிறுத்தி, அடாவடி அரசாங்கத்திற்கு எதிராக வேலை நிறுத்தம் செய்யத் தொழிலாளர்கள் துணிந்தபோது, அவர்களை முப்பது நாள்கள் மேலாக பட்டினியிலிருந்து காத்தது வ.உ.சி.,யின் சத்திரம் என்பது சரித்திரம்.

மகாகவி பாரதியார் தன்னை கம்பராகவும், வ.உ.சி யை சோழனாகவும் பாவித்து உறவாடி உரையாடியதிலிருந்தே அவர்களின் பிணைப்பு புலப்படுகிறதே!. அவரின் சுதந்திரதாகம் இவரையும் தொற்றிக் கொண்டதால், விடுதலை வேட்கையின் வேட்டையில் கிடைத்ததுவே சுதேசிக்கப்பல் திட்டம்.

ஆங்கிலேயர்களின் பொருளாரத்தை மூழ்கடிக்க வந்ததுதான் இந்தக் கப்பல், இதனை ஓட்டி, வெள்ளயர்களையும் நாட்டை விட்டே ஓட்ட எத்தனித்ததற்கு எத்தனை தடைகள், எத்தனை அவமானங்கள். அத்தனையும் தாங்கி, தனியொருவராக கலங்கரை விளக்கம் போல் வழிகாட்டியவர், நமது வ.உ.சி..

அந்நியத்துணிகளை பகிஷ்கரித்து இங்கும் சுதேசியத்திற்காக துணிவுடன் பிரச்சாரம் செய்து, சுதந்திரத்தின் சாரமாகத் திகழ்ந்தார்.

ஹரிஜன குழந்தையை தத்தெடுத்து, தீண்டாமையை ஒழிக்க முதலில் தன் இல்லத்திலிருந்தே தொடங்கி, அதன் இல்லாமையைக் காண விளைந்தார்.

“சுப்பிரமணிய” பாரதியுடன் மட்டுமல்ல, “சுப்பிரமணிய” சிவாவுடனும் வ.உ.சி.,க்கு இருந்த நட்பின் காரணத்தினால், இவருடைய மேடை பிரசங்கமும் வேல் போன்று வெள்ளையர்களின் ஆணவக்கோட்டையை தகர்த்தெறிந்தது அனைவருக்கும் தெரிந்ததே!!!

இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, தனது வாழ்வின் இருட்டை சந்திக்கப் பணியப்பட்டார், பயணப்பட்டார். படாடோபமாக வாழ்ந்தவர், சிறையில் பட்டபாடு பரிதாபகரமானது. சிரமப்பட்டு செக்கிழுத்து, சாவின் விளிம்புக்கே சென்று வந்தார்.

சிறையிலிருந்து விடுதலை அடைந்த பிறகு, ஆன்மிகம் மற்றும் தமிழ்மொழி சேவையில் காலத்தைக் கழித்தார். நன்றி மறவாமைக்கு முன்னுதாரணமாக விளங்கினார். இவரது வக்கீல் பயிற்சியை மீண்டும் தொடர வாய்ப்பளித்த **வாலேஸ்** என்ற ஆங்கிலேயரின் நினைவாக தன் மகனுக்கு **வாலேஸ்வரன்** என்று பெயரிட்டு விசுவாசத்தை வெளிப்படுத்தினார். தனது சுயசரிதையை செய்யுள் வடிவில் இயற்றி, புலமையை மட்டுமல்ல, எதையும் வித்தியாசமாக செய்யும் தமது பன்முகப்பாங்கையும் பறைசாற்றினார்.

இவரது மெய்யறிவு என்னும் நூல் வெளியிடும்பொழுது, இவரின் மெய்ச் சகோதரர் திரு. **வேதியப்ப பிள்ளை** அவர்கள் அளித்த பொருளுதவியால் அச்சிடப்பட்டது என்று நன்றியுடன் குறிப்பிட்டதோடல்லாமல், அவரின் நினைவாக, தனது இரண்டாவது மகளுக்கு **வேதவல்லி** என பெயர்சூட்டி மெய்ப்பித்தார்.

தத்துவ மேதை **ஜேம்ஸ் ஆலன்** ஆங்கிலத்தில் எழுதிய நூலை, **மனம் போல் வாழ்வு** என்ற தலைப்பில் வசீகரமான உரைநடையுடன் சிந்தையை கவரும் விதத்தில் தமிழாக்கம் செய்தார். இருப்பினும் இவருக்கே உரித்தான ஆகச்சிறந்த மனம் போல், இவரின் சீரிய வாழ்வு அமையாதது, முரண்படுவதுடன் வேதனை தருவதாகவும் இருக்கிறது.

பாலகங்காதர திலகரிடம் சுயராஜ்ஜியத்தின் பாலபாடம் கற்று அவரது அன்புக்கும் அடிமையானார். நமது “தென்னாட்டுத் திலகரும்” அவரது குருவைப் போலவே தமது 65வது வயதில் மறைந்தார். எனினும் தியாகம், மொழிப்புலமை மற்றும் ஆன்மிகத்தின் உருவாக இன்றளவும் நம்மிடையே வாழ்ந்து வருகிறார்.

தூத்துக்குடி துறைமுகத்திற்கு வ.உ.சி.,யின் பெயரை சூட்டித் தொடங்கிய நமது அரசாங்கங்களின் பிரதி உபகாரம், இவரது சுதேசிக் கொள்கைகளையும் பின்பற்றுவதால், இன்று நமது நாடு உலகத்தின் வலுவான ஐந்தாவது பொருளாதார சக்தியாக விளங்குகிறது. வாழ்க வ.உ.சி.,யின் புகழ்.

*– வீரஜா*





VH
VEDHAVALLI
HOLIDAYS
flyscoot.com
Singapore
Malaysia
6
நாட்கள்
Rs. 98,800/
07-12-2024
BANGKOK PATTAYA
Thailand
5
நாட்கள்
DUBAI
SHOPPING
FESTIVAL
6
நாட்கள்
Jan-13th 2025
SriLanka
5
நாட்கள்
your first
International Trip
91599 18447
Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking
VH
VEDHAVALLI
HOLIDAYS
வேதவல்லி ஹாலிடேஸ்
82, காமராஜர் சாலை, அலங்கார் தியேட்டர் எதிர்புறம், மதுரை -09

# இரங்கல்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் முன்னாள் செயற்குழு உறுப்பினர் திரு. கே.கே. கருணாகரன் அவர்கள் கடந்த 26.10.2024 அன்று காலமானார் என்ற செய்தி மிகுந்த வருத்தத்தை அளித்தது.

இவர், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் துவக்ககால ஆயுட்கால உறுப்பினராக இணைந்தவர். பின்னர் 2011-13, 2013-15, 2015-17 & 2017-19 என நான்கு முறை (எட்டு ஆண்டுகள்) செயற்குழு உறுப்பினராக இருந்து சேவை செய்தவர்.

ஒவ்வொரு சிட்கான் மாநாட்டிற்கும் தவறாது நன்கொடை வழங்கி வருபவர். லாப் ஸமாச்சார் இதழில் தொடர்ந்து விளம்பரம் தந்து ஆதரவளித்தவர்.

2013 சிட்கான் மாநாட்டில் அரங்க ஏற்பாடுகளை திறம்பட கையாண்டவர். 2015 சிட்கான் மாநாட்டில் ஆலோசகராகவும், 2017 & 2019 சிட்கான் மாநாட்டில் பாதுகாப்புக் குழுத் தலைவராகவும் இருந்து மிகச்சிறப்பாகப் பணியாற்றியவர். அதே காலக்கட்டத்தில், சேம்பரில் புதிய உறுப்பினர்களை இணைக்கும் பணியை ஈடுபாட்டுடன் செய்தவர்.

2019ல் செயற்குழு உறுப்பினர் பொறுப்பை புதியவர்கள் வரவுக்காக விட்டுக்கொடுத்தவர். அப்பொழுது முதல் இன்று வரையில் சேம்பர்-ன் ஆலோசகராக இருந்து வந்தவர்.

தொழில் மட்டுமல்லாது ஆன்மிக கைங்கரியங்களையும் செய்தவர். நல்ல மனிதர், பண்பும் பணிவும் நிறைந்தவர். இன்று நம்போடு இல்லாதது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா இறைவன் திருவடியில் சேர ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்கள் அனைவரும் பிரார்த்திக்கிறோம்.



**பெயர்: கே.கே. கருணாகரன்**
**தொழில்: சல்ஃபா இண்டஸ்ட்ரீஸ்** (கெமிக்கல்)

**ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் ஆயுட்கால உறுப்பினரும் செயற்குழு உறுப்பினருமாக இருந்தவர்.**

**மறைவு: 26.10.2024**









Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

---

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj®**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*





## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

---

## VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

**Head Office :** 79-A, South Marret Street, Madurai - 625 001.

**Branch :** No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

**Branch :** Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

---

## உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.11.2024 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

0452 231 2293 / 98409 60846 / 90479 50885

**UG CHEMI JAGSAN**

**U G கெமி ஜாக்சன்**

(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com

**வேல் மருத்துவமனை**

**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

24hrs Service





**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

